**O.S.No.232/2013**

**DW 4:** சரஸ்வதி தேதி 26.02.2026

பிவாசா 4 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

என் பிறந்த தேதி மற்றும் படிப்பு ஆகியவற்றை காட்டும் ஆவணம் எதுவும் இல்லை. நான் படிப்பறிவு இல்லாதவர். ஆதார் கார்டு மட்டும் உள்ளது. எனக்கு படிப்பறிவு இல்லை என்றும் வயது 68 என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் பெயர் துரைசாமி. எனக்கு 2 ஆண் மக்கள். மூத்த மகனுக்கு 38 வயது சின்ன மகனுக்கு 35 வயது. 8ம் பிரதிவாதி துரைசாமிக்கு வாசாஆ 6 நான் கிரையம் எழுதி கொடுத்திருப்பதாக சொல்லப்பட்டுள்ளது அது பொய் கிரையம் என்று சொல்கிறேன். நான் பத்திர பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம் எழுத சென்றேன் 2 பத்திரங்களை ஏமாற்றி எழுதி வாங்கிகொண்டார்கள். என்னுடன் என் அப்பாவும் சார்பதிவாளர் அலுவகத்திற்குவந்தார்கள். என்னிடம் காண்பிக்கபடும் வாசாஆ 6 புகைப்படம் என்னுடையது தான். சார்பதிவாளர் என்னை விசாரித்தார் என்றால் விசாரிக்கவில்லை. சார்பதிவாளர் முன்னிலையில் ரேகை வைத்தேன். ஆனால் அது ஏமாற்றி வாங்கி கொண்ட ரேகை என்று சொல்கிறேன். சார்பதிவாளர் அலுவலகத்தில் என்னுடைய போட்டோ பக்கத்தில் உள்ள ரேகை என்னுடையது தான். என் அப்பாவும்அதே தேதியில் வாசாஆ 7 ஸ்ரீராம் என்பவருக்கு கிரையம் செய்தார் என்றால் ஆமாம் ஆனால் ஏமாற்றி வாங்கி கொண்டார்கள். திங்களூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் என் அப்பா போட்டோ கொடுத்து வாசாஆ 7 ல் ரேகை வைத்துள்ளார் என்றால் ஆம் வைத்துள்ளார் ஆனால் ஏமாற்றி வாங்கி கொண்டதாக சொல்கிறேன். என் அப்பாவுடன் முத்துகவுண்டர் மகன் பழனிச்சாமி உடன் வந்திருந்தார் என்றால் 2 பேர் வந்தார்கள் யார் என்று தெரியவில்லை கையெழுத்து வாங்கினார்கள். வாசாஆ 6 கிரைய பத்திரத்தில் 2

முதல் 7 பக்கத்திலும் சரஸ்வதி என்பது என்னுடைய கையெழுத்து உள்ளது என்றால் ஆமாம் கையெழுத்து போட்டேன் ஆனால் அதை ஏமாற்றி கையெழுத்து வாங்கி கொண்டார்கள். நான் எதற்காக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன் என்றால் என் அப்பா உயில் எழுதி வைப்பதாக சொல்லி அழைத்து சென்றார். எத்தனை வருடத்திற்கு முன்பு உயில் எழுதி வைக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அது பதிவு செய்த உயிலா என்றால் பதிவு செய்த உயில் தான். என் அப்பா எழுதி வைத்தாக சொல்லப்படும் தானசெட்டில்மெண்ட் உயிலுக்கு முன் பின்பா என்றால் உயில் முதலில் எழுதப்பட்டது 5 – 6 வருடம் கழித்து தானசெட்டில்மெண்ட் எழுதப்பட்டது. தானசெட்டில்மெண்ட் என் அப்பா என்னை அழைத்து சென்று எழுதிவைத்தார். நான் கையெழுத்து போட்ட 2 பத்திரமும் யாரிடம் இருந்தது என்றால் என்னிடம் தான் இருந்தது. என் அப்பாவிடம் 2 பத்திரத்தையும் ஒன்றாக சேர்த்து எழுதி கொடுக்கும் படி கேட்டேனா என்றால் கேட்டேன் என் அப்பாவும் 2 பத்திரத்தையும் ஒன்றாக எழுதி கொடுப்பதாக சொன்னார். 2 பத்த்திரத்தையும் யார் பெயரில் இருந்து யார் பெயருக்கு எழுதி கொடுப்பதாக என் அப்பா சொன்னார் என்றால் என் அப்பா என் பெயருக்கு கொடுப்பதாக சொன்னார். ஒன்றாக பண்ணித்தருவதாக யார் சொன்னார்கள் என்றால் துரைசாமியும் ஸ்ரீராமும் சொன்னார்கள். என் அப்பாவும் அன்றைய தேதியில் கிரையம் செய்தார் என்றால் ஆமாம் ஒன்றாக செய்தார்கள். என் அப்பா பத்திரமும் நான் கொடுத்த பத்திரமும் ஒரே சமயத்தில் சார்பதிவாளர் அலுவகத்தில் ஒப்படைக்கப்பட்டது என்றால் ஆமாம். நானும் என் அப்பாவும் ஒரே சமயத்தில் துரைசாமி மற்றும் ஸ்ரீராமுக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தை தற்போது ஏமாற்றுவதற்காக மேற்படி கிரைய பத்திரம் பொய்யாக ஏமாற்றி வாங்கி கொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருக்கும் போது உயில் சொத்து எனக்கு வராது என்பது எனக்கு தெரியுமா தெரியாதா என்றால் என் அப்பா இறந்த பிறகு எனக்கு தான் வரும். துரைசாமியும் ஸ்ரீராமும் எப்போது 2 பத்திரங்களையும் ஒன்றாக என்னிடம் கொடுப்பதாக சொன்னார்கள் என்றால் அந்த பத்திரங்களை

என்னிடம் கொடுக்கவேயில்லை. அவ்வாறு பத்திரங்களை கொடுக்கவில்லை என்று என் அப்பாவிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அவ்வாறு என்னிடம் பத்திரங்களை ஒப்படைக்கவில்லை என்பதால் அதை குறித்து அறிவிப்பு அனுப்பலாம் என்று என் அப்பாவிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். நானும் என் அப்பாவும் பெருந்துறை நீதிமன்றத்தில் ஒரு வழக்கை நடத்தினோம் என்றால் சரிதான். திரு.தேவராஜன் வழக்கறிஞர் மூலம் பெருந்துறை நீதிமன்றத்தில் அ வ எண் 168/2005 என்ற வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கபடும் பிராது நகல் அந்த வழக்கின் நகல் என்றால் சரிதான். அது <u>வாசாஆ 34</u>. அ வ எண் 168/2005 வழக்கை நானும் என் அப்பாவும் நடத்தவில்லை என்று சொன்னால் நீதிமன்றத்திற்கு சென்றோம் ஆனால் வழக்கறிஞர் இல்லை என்பதால் வழக்கு முடிந்துவிட்டது. என்னை மாடு முட்டியது எந்த வருடம் என்றால் வருடம் தெரியாது சுமார் 3 – 4 வருடம் இருக்கும். மாடு முட்டியதற்காக சிகிச்சை எடுத்து கொண்டதாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை எண்ணெய் கட்டு சிகிச்சை எடுத்து கொண்டேன். நான் மாடு முட்டியதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. துரைசாமியும் ஸ்ரீராமும் வாதிகளுக்கு விற்று விட்டார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் சரியல்ல தெரியாது. என் அப்பா காணாமல் போய் எத்தனை வருடம் ஆகிறது என்றால் பத்திரம் எழுதியதில் இருந்து 4 – 5 வருடம் ஆகிறது. துரைசாமியும் ஸ்ரீராமும் எங்களை ஏமாற்றி பத்திரங்களை எழுதி கொண்டார்கள் என்ற விவரம் எப்போது தெரிய வந்தது என்றால் 2 – 3 வருடம் ஆகிறது. மாதம் வருடம் எனக்கு தெரியாது. தெரிந்த பின்னிட்டு நகல் எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். நகலை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். எங்கள் ஊரில் உள்ள ரமேஷ் என்பவரை அழைத்து சென்று நகல் எடுத்து பார்த்தேன். என் மகன்களிடம் மேற்படி ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டதாக சொன்னேனா என்றால் சொன்னேன். என் மகன்களை அழைத்து வந்து தான் நடவடிக்கை எடுக்கிறேன். மருமகள் என்னுடன் வருகிறார். இந்த வழக்கு 2013 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் தற்போதில் இருந்து 1 மாதத்திற்கு முன்பாக தான்

இவ்வழக்கில் ஆஜர் ஆனேன். தங்கம்மாளும் அவருடைய 2 மகன்களும் என் மீது வழக்கு தாக்கல் செய்தார்களா என்றால் சரிதான். (வாசாஆ 9). அந்த வழக்கில் சம்மன் வந்தது என்றால் சரிதான். அந்த வழக்கில் 2013 ல் வாசாஆ 9 ல் துரைசாமியும் ஸ்ரீராமும் வாதிகளுக்கு சொத்தை விற்றுவிற்றதாக சொல்லியிருக்கும் விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் அதை தெரிந்து கொள்ளவில்லை. 2013 ல் நான் சம்மனை பெற்று கொண்டு நீதிமன்றத்திற்கு போனேன். அந்த வழக்கில் நான் வழக்கறிஞரை நியமனம் செய்தேன் என்றால் சரியல்ல அந்த வழக்கில் நான் ஆஜரான பிறகு தான் மாடு முட்டிவிட்டது. வாசாஆ 9 அந்த வழக்கில் என் தந்தை இல்லை காணாமல் போய் விட்டார் நான் தான் இருந்தேன். அந்த வழக்கு நாளது வரை என்ன ஆனது என்று தெரிந்து கொண்டேனா என்றால் நான் படுக்கையில் இருந்துவிட்டேன். 1991 ல் தங்கவேல் என் பெயரிலும் என் தந்தை பெயரிலும் தங்கம்மாள் பெயரிலும் (வாசாஆ 13) வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் 7.1.2008 நடைமுறைப்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்ட தேதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டது என்றும் நான் காலம் கடந்து 20 வருடம் கழித்து மேற்படி கிரைய பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோர உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. துரைசாமியும் ஸ்ரீராமும் 2 பத்திரங்களை ஒன்றாக செய்து கொடுப்பதாக சொன்னதாக சொல்லப்படும் விவரத்தை என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லியிருக்கிறேன். அவ்வாறு எதிர் வழக்குரையில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொத்து பெயரில் எனக்கு எந்த வித பாத்தியமோ உரிமையோ இல்லை என்றும் காலம் கடந்து தாக்கல் செய்த எதிர் வாதம் ஏற்று கொள்ளகூடியது அல்ல என்றால் சரியல்ல. வாசாஆ 6 நகல் எடுத்தவுடன் அதை படித்து காண்பிக்கபடும் படி கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வாசாஆ 6 ல் என் அப்பா எனக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் தானசெட்டில்மெண்ட் சொத்து தான் வாசாஆ 6 ல் கிரையம் கொடுப்பதாக சொல்லியிருக்கிறேன் என்றால்

சரிதான். துரைசாமி மீது என்னை ஏமாற்றி கிரையம் செய்து கொண்டதாக நாளது வரை தனி வழக்கோ அல்லது இந்த வழக்கில் எதிர் கோரிக்கையோ தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் துரைசாமி மீது செய்யப்பட்ட கிரையம் செல்லாது என்று நான் சட்டப்படி நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தனிவழக்கு எதுவும் போடாததால் என்னுடைய எதிர் வாதம் செல்லாது என்றால் சரியல்ல. 1 மாதத்திற்கு முன்பாக தான் இந்த வழக்கு விவரம் தெரிய வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.